சென்னை மாகாண வாலிப நாடார் மகாநாடு.

நஞ்சுண்டாபுரத்தில் கூட்டம்.

ஹிந்தி மொழியால் கேடு விளையும்.

ஆங்கிலமே பொதுமொழியாக இருக்க வேண்டும்.

—:o:—

வார்தா திட்டம் பார்ப்பனீயத்தை வளர்க்கும் சூழ்ச்சி

தலைவர் பி. பி. ராமசாமி முழக்கம்.

நஞ்சுண்டாபுரத்தில் கூடிய சென்னை மாகாண வாலிப நாடார் மகாநாட்டில் தலைவர் தோழர் உடுமலை பி. பி. ராமசாமி நிகழ்த்திய தலைமைப் பேருரையின் சில பகுதிகள் வருமாறு:—

தமிழ்த்தாய் மொழி காப்பது நமது கடன்.

இந்நிலை பொதுமொழியாக்கக் கட்டாய படமாக ஏற்படுத்துவதால் விளையும் கேடுகள்:—

1. நம் தாய்மொழியின்வளர்ச்சியும் ஆக்கமும் குறையும்.
2. காரிக வளர்ச்சியும் முற்போக்குணர்ச்சியும் தடைபடும்.
3. காரிக உலகத்துடன் சேர்ந்தமக்கு மக்களின் தொடர்பு நீங்கி விடும்.
4. பிற்போக்குணர்ச்சியும் பொருளாதிக மனப்பான்மையும் ஊக்கம் பெறும்.
5. விஞ்ஞானக் கலைகளின் வளர்ச்சியும் கலை சாதனங்களால் அடையக்கூடிய நன்மைகளும் குறையும்.
6. பாமர மக்கள் மனதில் மூடனத்துவம், சமூக, சுதந்திர சுயமரியாதை உணர்ச்சிகள் பரவி வளர்வது கஷ்டமாகி விடும்.
7. இங்கிலீஷ் பாஷையுடன் தேசாபிமானம் வளர்ந்துள்ள அரசியல் கொள்கைகளும் ஜனநாயக உணர்ச்சியும், ஸ்தாபனங்களும் ஒழிந்து பழமை விலங்குகளை மக்கள் பூட்டிக்கொள்ளச் சாதகமாகும்.
8. இந்திய இந்தியாவில் அதிலும் தென்னாட்டில் கட்டாய படமாக்கி புகுத்துவது தென்னாட்டினர் மேல்வடநாட்டார் ஆதிக்கம் செலுத்தச் செய்யும் சூழ்ச்சியாகும்.
9. தென்னாட்டவர்கள் எக்காரியங்களுக்கும் வடநாட்டினரையே எதிர்பார்த்து நிற்கச் செய்வதோடு தென்னாட்டவர்களுடைய கல, பழக்க வழக்கம், காரிகம் முதலியவைகளை ஒழிக்கச் செய்வதாகும்.
10. தென்னாட்டில் கடைபெற்று வருகிற பத்திரிகை தொழில், அறிவு வளர்ச்சிக்கான பிரசுரங்கள் வெளியிடுதல் முதலியவைகள் தடைப்பட்டு விடும்.
11. பொருளாதாரத் துறையிலும் பனியா பேங்கர்கள் தென்னாட்டில் வந்து பொருள் வாரமாகக் கொள்ளை யடித்துச் செல்வார்கள்.

ஹிந்தி கலப்பு மொழி

12. மனித சமூக முன்னேற்றத்திற்கு இந்நிலை விட ஆங்கிலமே சிறந்ததாகும். இவ்விந்தி மொழியாவது இன்றைக்கு 480 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகும். இதில் ஒரு பங்கு இந்துஸ்தானியும் 8 பங்கு வடமொழியும் கலந்து ஏற்பட்டதாகும். இது இலக்கிய இலக்கண வளப்பமுடைய மொழியுமல்ல; நூல்களுமில்லை. இதனால் கலை வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் பெற முடியாது. தென்னாட்டில் புகுத்தப்படும் இந்தியானது மைலி எனப் பெயருடையது. இதில் துளசிதாஸ், ராமாயணம், பகவத் கீதையுமே நூல்களாகும். இந்நூல்களில் பிறப்பில் உயர்வு தாழ்வு உண்டென்பதும், வருணாச்சிரம தர்மம் கொள்கையை நிலை நாட்டுவதும் அத்தத்த ஜாதிக்குரிய தொழிலையே அவனவன் செய்ய வேண்டுமென்பதுமாகும். ஆகவே இதைக் கட்டாய படமாக்குவதை வாலிபர்களாகிய நீங்கள் எதிர்த்து போரிடல் வேண்டும். கட்டாய படமாக வைக்கப்பட்டிருக்கும் கலாசாலைகளைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

இதில் யாரும் கட்டுபேதம் காட்டாது கலந்து இனிய தமிழ் தாயைக் காக்க வேண்டும். மாணவர்களை கலாசாலைக்குச் செல்லாதபடி மறியல் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும்.

ஆங்கிலத்தால் விளைந்த நன்மைகள்

ஆங்கிலம் கட்டாய படமாக ஏற்பட்ட பின் உயர்தரப் படிப்பு இந்நாட்டில் உள்ள மக்களில் எல்லா சமூகத்தவர்களிலும் சிற்சிலருக்குப் பயன்பட முடிந்தது. இந்து சாஸ்திரப்படி சூத்திரதும் படிக்கிற ஜாதி படிக்கக்கூடாத ஜாதி, கற்பிக்கிற ஜாதி, கற்பிக்க போகியதை இல்லாத ஜாதி என்ற இருந்து வந்த கட்டுப்பாடுகள் ஒழிந்தன. முன் கேட்டு அறியாத சுதந்திரம், சகோதரத்துவம் என்கிற உணர்ச்சிகள் பாமர மக்களிடை பரவ முடிந்தது. மேல் சாதிகளில் இருப்பது போன்ற தேசியே உணர்ச்சியும் தேச அபிமானமும் ஏனவுக்கு உருக்கொள்ள முடிந்தது. நம் தாய் மொழி வேறு பாஷை ஜனங்களுடன் கூட்டுறவு கொண்டு ராஜீய வியாபார சம்பந்தப்பட்ட உலக விவகாரங்களில் ஈடுபடுவதற்குப் பயன் படுவதில்லை. இதற்காக இரண்டாவது பாஷை கற்க வேண்டி இருக்கிறது. இந்த இரண்டாவது பாஷை உலகிலுள்ள பெரும்பாலானவர்களுக்கு பொதுவானதும், காரிக வளர்ச்சிக்குத் துணையாக இருப்பதும் இலக்கியச் சிறப்பு வாய்ந்ததும் ஆக இருத்தல் அவசியம்.

இந்த வகையில் பார்க்கும் போது நம் நாட்டின் தற்கால நிலைமைக்கும், உலக நிலைமைக்கும் பொருத்தமான பொதுபாஷை ஆங்கிலமேயாகும். ஆகவே ஆங்கிலத்தையே இரண்டாவதுபாஷையாகக் கற்பது பயன் தரும். பார்ப்பனப் பிள்ளைகள் சதாகாலமும் காலை மாலை இருபொழுதும் தங்கள் தங்கள் வீட்டில் அனுஷ்டானம், சந்தியா வந்தனம் செய்யும் போதெல்லாம் வட மொழியில் சுலோகங்களைச் சொல்லி பழக்கப் பட்டிருப்பதாலும், வடமொழியே அவர்களுக்குத் தாய் மொழியாதலாலும் இந்தியில் 3 பங்கு வடமொழி இருப்பதால் அவர்கள் இதனுடனாக கற்றுக் கொள்ள முடியும். நம் பார்ப்பனரல்லாத மாணவர்கள் நம் தாய் மொழியே 100-க்கு 2½ பேருக்குக்கூட இன்றுவரை கண்டு கற்றுத் தேர்ச்சியடையாமல் இருக்கும்போது, வேறு மொழியான இந்தியையும் சேர்த்து படிப்பதென்றால், பிள்ளைகள் படிக்கமுடியாமல் கல்வியில் வெறுப்பும், அச்சமும் ஏற்பட்டு முன்னேற முடியாமல் வீழ்ந்து விடுகிறார்கள்.

ஹிந்தி கட்டாய பாடம்— பார்ப்பனர் சூழ்ச்சி

இந்த வகையிலும் பார்ப்பனரல்லாத பிள்ளைகளின் கல்வி கலையும் தடைபடுத்தவே வடஆரியப் பார்ப்பனர்கள் இந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்தும் சூழ்ச்சியைச் செய்திருக்கிறார்கள். நாமவர்கள் இதனால் வரும் கேட்டை இன்னும் சரிவர உணர முடியாமல் அவர்கள் கற்றுப்பிரயாணம், பிரசாரம், பத்திரிகை வழிகள் இவைகளின் மூலம், நம்மவர்களை ஏமாற்றி வருகிறார்கள். தாய் மொழியையும் அதிலுள்ள இலக்கியங்களையும் மறியாமல் பிற மொழிக்கே தம்மை அடிமைகளாகத் துறந்து கொண்டு விட்டவர்கள் தமிழ் நாட்டில் இருக்குமளவு வேறு நாட்டில் இல்லை தாய்

சென்னை மாகாண வாலிப நாடார் மகாநாட்டுத் தலைவர் தோழர் உடுமலை பி. பி. ராமசாமி அவர்கள்.

மொழியில் மனம் செல்லாதவர்கள், வேறு எது பெறினும் தம் மைய அடியுடன் இழந்து விடுகிறான். தாய்மொழி ஒன்றே இயற்கை மற்றைய மொழிகள் செயற்கையால் சேர்த்துக் கொள்ளப் பெற்றவை. அவரவர் தாய் மொழியே அவரவர் வளர்ச்சிக்கு ஆதாரமாய் அமைதல் வேண்டும். பிற மொழியிற் பெரும் புலமையுடையவரேனும், அவரவர் தாய்மொழிக் கற்றுத் தேராத வரையில் முழு மனிதர்கள் ஆகமாட்டார்கள் என்பதாம்.

வார்தா கல்வித் திட்டம்.

பார்ப்பனீயத்தை வளர்க்கும் சூழ்ச்சி, தேச விடுதலைக்கு முட்டுக் கட்டை, பெண்களை அடிமைப் படுத்தும் மோசடி, அவிலை மொழிக்கு கல்தா, இத்திட்டம் ஆரம்பக் கல்விக்கு மட்டும் உரியதா, செக்கண்டரிக் கல்விக்கும் உரியதாவெனத் தெளிவாகக் கூறப்பட வில்லை. அது தெளிவு படுத்தப் பட்டது ஒரு பெருங் குறையே. பாமரர்களிலும், நகரங்களிலுமுள்ள 7 முதல் 14 வயதுவரையுள்ள பெண்கள், ஆண்களுக்காவே அத்திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக இருந்தால் அது மிகவும் பலனான திட்டம் எனபதற்கு ஐயமில்லை. இப்பொழுது இருக்கும் கல்வித் திட்டம் மிக மோசமானது என்றும், எல்லாரும் அதை வெறுக்கிறார்கள் என்றும் காந்தியார் சொன்னார். இப்பொழுது உள்ள கல்வி முறையை வெறுப்பவர்கள் பார்ப்பனர்களே. ஏனெனில் அவர்கள் தற்கால முறைப்படி படித்துவிட்டு உத்தியோகம் பார்த்து வயிறு வளர்ப்பதற்கு இடையூறாக மற்றவர்களும் படித்துப் பார்ப்பனர்களின் ஏகபோக உரிமையில் பங்கு கேட்க ஆரம்பிக்கவே சேதத்துக்கு வந்து விட்டது காரம். தற்கால கல்வி முறை ஒழிக்கவேண்டும் என்று கூச்சல் போடுகிறார்கள். அதனால் இந்த முறையை ஒழித்து விட்டு எந்த காலத்திலுங் தங்களுக்கு மேடு உண்டாகாத வகையில் கல்வி திட்டத்தை வகுத்து விட்டால் எவ்வளவோ நலமாயிருக்கும் என்ற கருதியே வார்தா கல்வித் திட்டத்தை ஒரே முச்சாக சகல பார்ப்பனர்களும் ஆதரிக்கிறார்கள். அவர்களின் கருத்தையே நாடும் காந்தியாரே தான் பார்ப்பானாகப் பிறக்க வில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கும் நிலைமையில் இந்தத் திட்டத்தின் மூலம் பார்ப்பனுக்கு உழைக்க ஏற்பாடு செய்வதில் அவசியம் ஒன்றுமில்லை. காந்தியார் இத் திட்டத்தின் நோக்கத்தையும் முக்கியத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்.

காந்தியார் வியாக்கியானம்.

அவைகளை அறிவுள்ளோர், வாலிபர்கள், கூர்ந்து கவனிக்க வேண்டும். ஏனெனில், தேசிய பார்ப்பனர்கள், அந்த விஷயங்களை மறைத்தோ அல்லது திரித்தோ வியாக்கியானம் செய்து பொதுமக்களை ஏமாற்ற முயற்சிப்பார்கள். Most of boys were lost to the parents and to the occupation to which they were born. In this age those born to certain professions had forgotten them taken to clerical careers, and were lost to the country side ("south Indian Teachet") என்ற பத்திரிகை வரம்பர் (தமிழ்) பெரும்பாலான பையன்களைப் பெற்றோர்கள் இழந்தவர்கள் ஆகிவிட்டார்கள் என்றும், எந்த தொழிலுக்குப் பிறந்தார்களோ அதாவது எந்தத் தொழில் செய்யும் குடும்பத்தில் பிறந்தவர்களே அத் தொழிலை மறந்து விட்டு குமாஸ்தாக்களாகப் பார் போயிருக்கிறார்கள் என்றும் அதன் காரணத்தால் நாடுகளில் காலியாய் விட்டன என்றும் தன் உள்ளக் கருத்தை நிருவாய் மலர்ந்தருளியிருக்கிறார், நாம் கொண்டாடும் மகாத்மா. இதற்கு என்ன அர்த்தம்? விவசாயம், தச்சவேலை, கொல்வேலை, ஷௌரத்தொழில், வண்ணார் தொழில் இன்னும் எத்தனையோ பல தொழில் செய்பவர்கள் தற்காலப் போக்கை அறிந்து கொண்டு தாங்களும் முன்னேற்றமடைய முயற்சிக்கிறார்களே, அதைத் தடுப்பதற்காகவா இந்தக்கொடிய வஞ்சனையான திட்டத்தைக் காந்தியார் கொண்டு வந்திருக்கிறார், என்று கேட்கிறேன்.

மட்டப்பாறை அய்யர் கூற்று.

இதை ஒட்டி தோழர் மட்டப்பாறை வெங்கிட்டராமய்யர் ஓர் ஆண்டின் முன் சிலக்கோட்டையில் தேர்தல் பிரசாரம் செய்யும் போது நாடார்கள் கையில் நிரம்ப கருப்பட்டியும் தந்து நிறுக்கச்செய்து பழைய தொழில் செய்யும்படிச் செய்யப் போகிறேன் என்று சொல்லிச் தெரிவிழுந்தார். நம்மவர்களைக் கவிழ்க்க பார்ப்பனர்கள் செய்த சதியாலோசனைத் திட்டமோ என்று சந்தேகிக்க வேண்டியதாயிருக்கிறது. மேற்கண்ட தொழில்களில் ஒன்றுமே செய்யாமல் ஏட்டும்பு சோகமல் வயிறு வளர்த்தல் கொழுத்துக்கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் எல்லோரும் எல்லா உத்தியோகங்களிலும் அமர்ந்து இந்நிரபோகம் அனுபவித்துக்கொண்டிருப்பதற்காகவா என்று கேட்கிறேன்! இது வருணாச்சிரம தர்மத்துக்கு அடிகோலுவதல்லவா என்று கூர்ந்து கவனியுங்கள். நம் குல வாலிபர்களே, நம்மிலும் சிலர் இத்திட்டத்தை விரும்புவதாகக் காண்கின்றேன். அப்படியானால் நம் குலத்திற்கு மனுநீதிப் பிரகாரம் வருணாச்சிரம தர்மப் பிரகாரம் ஏற்பட்ட தொழில் என்ன? எந்தத்தொழிலைச்செய்யப்போகின்றீர்கள். கூர்ந்தகவனியுங்கள். விழிப்பாயிருந்து அடியுடன் இத்திட்டத்தை ஒழிக்க முற்படுங்கள்.

அரசியல்.

நம் மகாநாடு குல முன்னேற்றம் ஒன்றையே நோக்கமாக வுடையது. அரசியல் நோக்கம் இல்லை எனக் கருதிக்கொண்டிருக்கிறோம். அரசியலால் நேரும் இடையூறுகளை ஒழிக்க நம் மகாநாடும் சன்கமும் வேலை செய்து தான் தீர வேண்டும். நம்மவர்க்கு முன்னர் நியமனத்தின் மூலமாக அரசியலில் ஸ்தானம் கிடைத்தது. இப் புதிய அரசியலில் அவ்விதம் பெற இடமில்லை. ஆதலால் நாம் தேர்ந்தெடுப்பின் மூலமாகவே நம்மவர்க்கு உரிய பங்குகளைப் பெற வேண்டும். அவசியமான எல்லா ஸ்தாபனங்களிலும் நம் வகுப்பினர் பிரதிநிதிகளாக இருந்து நம்மவர் நலத்தைக் காக்க வேண்டும்.

சட்டசபைப் பிரதிநிதிகள்.

பாண்டிய நாட்டைத் தவிர்த்து வேறு ஜில்லாக்களில் சிதறுண்டு கிடக்கும் நம்மவர் மதுரை ஜில்லாவில் குறிப்பிட்ட சில தாலூகாக்களில் குடியேறி நிலைத்து கட்டுப்பாடுடன் ஒற்றுமையாக வாழ்ந்தால் சில பிரதிநிதிகளாவது அரசியலில் அங்கம் பெறலாம். இப்பொழுது ராமநாதபுரம், திருநெல்வேலி இரு ஜில்லாக்களில் நம்மவர் இருவர் காங்கிரஸ் கட்சியின் பலத்தால் அங்கம் பெற்றவர்களே யல்லாமல், நம்மவர்களின் தனிப்பட்ட வலிமையால் பதவி பெற்றவர்களாக நான் கருதவில்லை. ஆதலால் தோழர்களே நம்மவர்களின் முற்போக்கையே பெரு நோக்கமாக நீங்கள் பலரும் கொண்டிருப்பது உண்மையானால், நம்மவர்களில் குறைந்தது ஏழு பிரதிநிதிகளாவது சட்டசபையில் இனிமேல் அங்கம் வகிக்க வழிநான வேண்டும். இதற்கு நான் சொன்ன மார்க்கமே ஏற்றதாகும். ஆதலால், பலர் பலவாறாகச் சிதறுண்டு கிடப்பதிலும் ஒரே இடத்தில் ஒன்று சேர்ந்து வலிமையுடன் வாழவேண்டும். உதாரணமாக கோவை நில்லாயிலும், சேலம் ஜில்லாயிலும் தவிர வேறு எங்கும் இல்லாமல் கொங்கு வேளாள மாபினர் நிரண்ட கூட்டமாக வாழ்ந்து ஐக்கியமாக இருப்பதால் ஏறக்குறைய 10 பேர்கள் சட்டசபையில் பிரதிநிதிகளாக வர இடம் ஏற்பட்டது. ஆதலால் நீங்கள் நன்கு உணர வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இது வரையிலும் நமக்குப் பிரதிநிதிகளாக இருந்தும் நம் நலனைப் பல வழிகளிலும் காத்து இவ்வுயர்ந்த நிலையை அடையச் செய்த நம் குலத் தலைவர்களுக்கு என்றும் மறவாநன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முடிவுரையில் சுருக்கமாக சில வேண்டுகோளைத் தெரிவித்து என் தலைமை உரையை முடித்து விடுகிறேன். நம்மவர் செல்வம் நம்மவர்க்கே பயன்படும்படி உழைப்பும் பிழைப்பும் பெருக வேண்டும். நம்மவர் வாழ வேண்டிய எல்லாத் தொழில் தொழில்களும் நமமவரால் நடக்க வேண்டும். நம் பெரியார்களின் திருநாட்களைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். நம்மவர் கோலும் நிலயங்களுக்கும் நம் பெரியார்களின் பெயரையே வைக்க வேண்டும்.

இதுவரை என் சொற்பொழிவை அமைதியுடனும் விருப்புடனும் கேட்டுச் சிறப்பித்ததற்கு என்றும் மறவா நன்றியறிதலுடையேன்.